








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 29.11.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்குப் பதிலாக ஏற்கெனவே நடைமுறையில் இருந்த **பழைய ஓய்வூதிய திட்டத்தையே தொடர்வதற்கான சாத்தியக் கூறுகள்** குறித்து ஆராய அமைக்கப்பட்ட **"டி.எஸ்.ஸ்ரீதர்"** தலைமையிலான குழு தனது அறிக்கையை தமிழக முதல்வரிடம் சமர்பித்துள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- ஆட்டிசம் குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு சிகிச்சை மற்றும் பயிற்சி அளிப்பதற்கான, இந்தியாவின் முதலாவது ஆட்டிசம் நகரியம் **(world – class autism township)** மேற்கு வங்க மாநிலத்தின் கொல்கத்தாவிற்கு அருகில் அமைய உள்ளது.

- தேசிய சுகாதார நிறுவனத்தின் படி, **ஆயுஷ்மான் பாரத் - பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டம்** ஆகிய இரண்டு திட்டங்களை, சிறந்த செயலாக்கம் புரிந்த மாநிலகளின் பட்டியலில் **குஜராத் மாநிலம் முதலிடத்தில்** உள்ளது.
    - தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும் சத்தீஸ்கர் மூன்றாவது இடத்திலும் உள்ளது.
- குறிப்பு:
    - குஜராத்தானது, 2012 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தை யொத்த முக்கிய மந்திரி அம்ருதம் **(MA Yojana)** என்ற திட்டத்தை செயல்படுத்தியது அதன் வெற்றிக்கான காரணமாகும்.

## உலக நிகழ்வுகள்

- அர்ஜென்டினா நாட்டின் தலைநகர் **ப்யூனோஸ் அயர்ஸ்** நகரில் 13 வது **ஜி-20 (G-20)** மாநாடு நவம்பர் 30 முதல் டிசம்பர் 1 வரை நடைபெறுகிறது. இந்த G-20 மாநாட்டில் இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார்.
    - **ஜி-20 கூட்டமைப்பில் இங்கிலாந்து அமெரிக்கா, சீனா, இரஷ்யா, அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, ஜப்பான்** உள்ளிட்ட உலகின் வளர்ந்த நாடுகள்

பங்கேற்க உள்ளனர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **14வது உலககோப்பை ஹாக்கி** போட்டியானது **ஒடிசா** தலைநகர் புவனேஸ்வரத்தில் உள்ள கலிங்கா ஸ்டேடியத்தில் **நவம்பர் 28** அன்று தொடங்கியுள்ளது. இப்போட்டியில் இந்தியா உட்பட 16 நாட்டு அணிகள் பங்கேற்கின்றன. **இந்திய ஹாக்கி அணியானது மன்பிரீத் சிங்** தலைமையில் பங்கேற்கிறது.
- குறிப்பு:
  - கடந்த **2014ம்** ஆண்டு நெதர்லாந்தில் நடைபெற்ற **உலக கோப்பை ஹாக்கி** போட்டியில் ஆஸ்திரேலிய அணி சாம்பியன் ஷிப் பெற்றது குறிப்பிடத்தக்கது.
  - இந்திய அணி **1975ல்** ஹாக்கி உலக கோப்பையை வென்றது குறிப்பிடத்தக்கது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இஸ்ரோ தயாரித்த பூமியை கண்காணிக்கும் வகையில், விண்வெளியில் இருந்து மிக துல்லியமாக புகைப்படங்களை எடுக்கும் 'ஹைப்பர் ஸ்பெக்ட்ரல் இமேஜிங் கேமராக்கள்' கொண்ட **"HysIS" (Hyperspectral Imaging satellite)** என்னும் செயற்கைகோள் மற்றும் வணிக ரீதியிலான 30 செயற்கை கோளுடன், பி.எஸ்.எல்.வி. சி-43 (**PSLV-C43**) என்னும் ராக்கெட் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து இன்று (நவம்பர் 29) வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
  - பி.எஸ்.எல்.வி சி-43 இந்தியாவின் **45-வது** பி.எஸ்.எல்.வி. ராக்கெட் ஆகும்.
  - இந்தியாவின் **"HysIS"** செயற்கைகோள் பூமியில் இருந்து சுமார் 636 கி.மீ. உயரத்தில் புவி வட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட உள்ளன.

- செவ்வாய் கிரகத்தின் உட்பகுதியில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான **நாசாவானது**, **2018ம் ஆண்டு மே 5ம் நாள்** அனுப்பிய உலகின் முதல், ரோபோ விண்கலமான **இன்சைட் விண்கலம் 50 கோடி கி.மீ.**

பயணத்திற்குப் பிறகு **நவம்பர் 27** அன்று செவ்வாய் கோளில் வெற்றிகரமாக தரையிரங்கி தனது முதல் செவ்வாய் கோளின் புகைப்படத்தை அனுப்பியுள்ளது.

## முக்கிய தினங்கள்

- **இந்திய உடல் உறுப்பு தான தினம் (Indian Organ Donation Day) - நவம்பர் 27**
    - மத்திய சுகாதாரம் - குடும்ப நலத்துறை அமைச்சகம், தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு **(NOTTO : National Organ & Tissue Transplant Organisation)** இணைந்து நடத்தும் ஒன்பதாவது இந்திய உடல் உறுப்பு தான தினம் நவம்பர் 27, 2018 அன்று டெல்லியில் நடைபெற்றது.
    - உலக உடல் உறுப்பு தான தினம் **(World Organ Donation Day)** ஆண்டுதோறும் ஆகஸ்ட் 13ம் தேதி கடைபிடிக்கப்படுகிறது.
- குறிப்பு:
    - **இந்தியாவில் உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் தொடர்ந்து நான்காவது முறையாக முதலிடத்தில்** உள்ளது குறிப்பிடத்தக்கது.

We Shine Academy™